www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# தேனீ

கார்த்திகை

THENEE NOVEMBER 1989



உழைத்து, உழைத்து
உறுதியானவர்கள்
நீங்கள்
அதனால் தான்
உங்களை
முதுகெலும்பாக்கிக் கொண்டது
இந்த தேசம்
..................
................
நீங்கள் ஒவ்வொருவரும்
சரித்திரங்கள்
உங்களை
விரித்துப் பார்க்க
விரைந்து வரலாம்
நாளை
இந்த தேசம்
--- வெளிமடை ரபீக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

ஸ்ரீலங்கா அரசபடைகளின் தேடி அழிக்கும் நடவடிக்கைககளும், ஜே.வி.பி யினரின் கண்மூடித்தனமான கொலைகளும் தென்னிலங்கையைப் பிணக்காடாக்கிக் கொண்டுவரும் செய்திகள் பத்திரிகைகளை நிறைக்கின்றன. முழுக்குடுமபங்களையும் அழித்தல், வீட்டோடு வைத்துத் தீமூட்டல் ஆகியவையும், தபாலகங்களும் அரச கட்டடுங்களும் தீக்கிரையாக்கப்படுதலும் நாளாந்த நிகழ்ச்சிகளாகிவிட்டன. யுத்தநிறுத்தங்களும், மீறல்களும் நடந்தேறின.

இந்தியப்படைகள் அமபாறை மாவட்டத்திலிருந்து முற்ருக மீளப்பெறப்பட்டன. இதையடுத்து விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் உதவியுடன் தமிழ் போராளிகளைத் தாக்கியுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

* * *

18.09.89

இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையில் நிகழ்ந்த உடன்பாடொன்றின்படி (20.9.89- புதன்) வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப்படைகளுக்குமிடையில் யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த யுத்த நிறுத்தத்திற்குச் சம்மதம் தெரிவித்து விடுதலைப் புலிகளும் புதன்கிழமை ஓர் அறிக்கையை வெளியிடடுள்ளனர்.

21.09.89

யாழ் மருத்துவபீட விரிவுரையாளர் ராஜனி திரணகம சுட்டுக் கொல்லப்பட்டார்.

26.09.89

திருமதி.ராஜனி திரணகமவின் கொலையைக் கண்டித்து தமிழ்த்தேசியசபை வடக்கு- கிழக்கில் 26.09.89 கர்த்தால் அனுஷ்டித்தது.

27.09.89

தென் இலங்கைத் தீவிரவாதிகளுக்கெதிராக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்த 72 மணி நேர "யுத்தநிறுத்தம்" 27.09.89 காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது.

30.09.89

கடந்த ஜூன் மாதம் வரையில் வன் செயல்கள் காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நாலு லட்சத்து 92 ஆயிரத்து 605 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண அரசின் புள்ளி விபர அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. யாழ் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 874 குடும்பங்களும், கிளிநொச்சி மாவாட்டத்தில் 27 ஆயிரத்து 485 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 ஆயிரத்து 252 குடும்பங்களும், மன்னூர் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 472 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 23 ஆயிரத்து 300 குடும்பங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 ஆயிரத்து 221 குடும்பங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 52 ஆயிரம குடும்பங்களும், அம்பாறை மாவட்டத்தில் 52 ஆயிரம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக முறையிடப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு, கொடுப்பனவுகள் மற்றும் உற்பத்தித்திறன்வாய்ந்த நன்கொடை, வீடமைப்பு நன்கொடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி மூன்று லட்சத்து 27 ஆயிரத்து 296 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவைப் பெறவும், மூன்று லட்சத்து 57 ஆயிரத்து 930 குடும்பங்கள் உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடையைப் பெறவும், ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 199 குடும்பங்கள் வீட மைப்பு நன்கொடையைப் பெறவும் தெரிவாகியுள்ளன.

ஜூன் மாதம் வரை 2 லட்சத்து 28 ஆயிரத்து 636

அட்டைப்படம் ஓவியர் ராஜசேகர்_ நன்றி கொழுந்து

(தொடர்ச்சி பக்கம் 19)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்கு தேனீயின் அன்பான வணக்கங்கள்.

"பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்"-இலங்கையை ஆண்டு கொண்டிருப்பது சந்தேகமில்லாமல் பேய்கள் தானென்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது சிறிலங்கா அரசு.
நாடு முழுவதும் இரத்த ஆறு ஒடினாலும் பரவாயில்லை இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் பிணங்களின் மேல் ஆட்சிக்கட்டிலேறி தனது பதவிகளைக் காத்துக் கொள்வதற்காக போடாத குத்துக்கரணங்களைப் போட்டு தனது ஆட்சியை இன்று வரை தொடர்கிறது.

ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து வன்செயல் என்பது சிறிலங்கா அரசின் நாளாந்த நடைமுறையானது. அப்பாவித்தமிழ் பேசும் மக்கள் வாழும்பிரதேசங்களையே பிணக்காடாக்கி கொலைகயையும்,கற்பழிப்புக்களையும் நடாத்திய அரசபடைகளின் தயவில் தெடர்ந்தும் தனது ஆட்சியை நடத்தியும் வருகின்றது.

தமிழ்ப் பகுதிகளில் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டபோதும் அநீதியின் மொத்தவுருவமாக சிறிலங்கா அரசின் கூலிப்படைகளின் கொலை வெறியாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதும்,"வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பயங்கரவாதிகள் கொல்லப்படுகிறார்கள்"என்பதே சிங்களப்பெரும்பான்மை மக்களின் பொதுவான கணிப்பீடாகவிருந்தது. அரசு செய்து வந்த பிரச்சாரமும் அதுதான்.

ஆனால் இன்று தென்னிலங்கையே எரிகிறது. சிறிலங்கா கூலிப்படைகளின் வதை முகாம்களில் இப்பொழுது சிங்கள இளைஞர்களின் அவலவொலிகளும் கேட்கத் தொடங்கியுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே.வி.பியினரைத் தேடுகிறோம் என்ற போர்வையில் இடதுசாரிகளையும் தொழிற்சங்கவாதிகளையும் தேடியழிப்பது மும்முரப்படுத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் 24 மணி நேரத்திற்குள் கொல்லப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை 20 இலிருந்து 30 வரை என்று செய்தியொன்று தெரிவிக்கின்றது.
தலையில்லாத உடல்கள் தெருக்களில் சாதரணமாகக் கிடக்கின்றன.அனேகமான ஆற்றங்கரைகளில் தினமும் பிணங்கள் வந்து ஒதுங்குகின்றன.

பத்திரிகைச்சுதந்திரம்,கருத்துச்சுதந்திரம் என்பவற்றிற்கு வடக்கிலிருந்த நிலை இப்பொழுது தெற்கிலும் ஏற்படத்தொடங்கியுள்ளது.
மக்கள் வாய்களைத் திறக்காதபடி வைத்திருப்பதில் இராணுவத்தினரதும் ஜே.வி.பி யினரதும் துவக்குகள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன.

ஆனால் இந்த நிலமைகளில் ஓரளவு சுமூகமான நிலமைகள் ஏற்பட்டிருந்த வட-கிழக்கில்," இந்தியபடைகள் வெளியேறிய பின் பெரிய இரத்தக் களரிக்கு இடமிருக்கின்றது"என்று ஒட்டுமொத்தமாகக் கூறி இன்றைய நாட்டு நிலமைகளை தள்ளிநின்று மேலோட்டமாகப் பார்க்கும் நிலையிலேயே பலரும் இருக்கின்றனர். வடக்கு கிழக்குப் பகுதிகளில் மீண்டும் சிறிலங்கா கொலைப்பட்டாளங்கள் இயங்குவது சிறிலங்கா அரசிற்கும் அதன் ஆதரவு சக்திகளுக்கும் வேண்டுமானால் நன்மையாகவிருக்கலாம். ஆனால் எமது மண்ணில் கறைபடிந்த அத்தியாயங்களையும் துயர்மிக்க அழிவுகளையும் ஏற்படுத்திய அரக்கர்களின் வரவை எமது மக்கள் ஒரு போதும் விரும்ப மாட்டார்கள்.

எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்துசெயற்பாடுகளிலும் மக்களையும் பங்களிக்கச் செய்வதன் மூலம் மாத்திரமே மக்கள் விரோத சக்திகளைத் தோற்கடித்து,எமது தேசத்தின் கௌரவமான இருப்பை உறுதிப்படுத்தலாம்.

தேனீக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீபாவளி

இங்கு
ஏக்கங்களே
இதயத்தில் எரிகின்றன
தீபாவளி விளக்குகளாக
நாங்களோ திரிகளாக...

பட்டாசுகள்
வெடிக்கின்றன வானத்தில்
எங்களுக்கென்னவோ
வெடித்துப்போவது
ஆசைகள்தான்...

நாட்களை மாதம்
விழுங்க
வருடம் தீபாவளி மூச்சை
விட்டுவிடுகிறது
அதையும் சுவாசிக்க
முடியாமல்
நாங்கள்...

பண்டிகை
திருவிழா உற்சவம்
எதற்குமே
சந்தோஷிக்காத
எமது முகங்கள்

மௌனமாய்
நேசிக்கும் அவளோ
புதுப்புடவை கேட்டு
கடிதம்...
இன்று நம் தேசமே
நிர்வாணமாகிவிட்டதே...

சூரியனை செய்த
நம் குமாரர்கள்
அதை
இருட்டிலே
தொலைத்துவிட்டார்களாம்...

ஏன் என்பது
புரியாத
எமது கண்ணீர் நின்றுவிட
ஒரு நேரம் செய்வோம்
ஆனல்
நீங்கள் கைகளை
இணைத்தால் மட்டுமே!

– காங்கேசன் கோவிந்தகுமார்

www.tamilarangam.net

சிறுகதை

# இருண்ட வானம்

எனது மனம் தூரத்துக்கு... மிக மிகத் தூரத்துக்குச் சென்று சஞ்சரித்துவிட்டு மீண்டும் என்னிடமே வருகிறது... நான் கால்கள் இரண்டையும் சற்று முன்னுக்கு நீட்டிவிட்டு விரிவுரையைச் செவி மடுக்க முயற்சிக்கிறேன்.

மிஸ். விஜேசிங்க, ஜனநாயகம் பற்றிய பாடத்தை விவரித்துக் கொண்டிருக்கிறார். மெதுவாகத் தலையை அங்குமிங்கும் திருப்பி வகுப்பு முழுவதையும் நோட்டம் விடுகிறேன். மாணவிகள் மிஸ். விஜேசிங்கவின் விரிவுரையைக் குறித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

மண்ணாங்கட்டி! ஜனநாயகம்... சுதந்திரம்... சமத்துவம்... மிஸ். விஜேசிங்கவின் சேலையில் உள்ள கரை மிகவும் அழகாக உள்ளது. ஆனால் சாறிக்கேற்ற விதத்தில் சட்டை அமையவில்லை. எனக்கு அருகில் விஜிதா அமர்ந்திருக்கிறாள். அவளும் நோட்ஸ் எடுக்கிறாள். மெதுவாக விஜிதாவின் கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்கிறேன். இன்னும் 20 நிமிடங்கள் தான் உள்ளன. நாளைக்கு விஜிதாவின்குறிப்புப் புத்தகத்தை [எடுத்து] நோட்ஸைப் பார்க்க வேண்டும்!

எந்த ஒரு விடயத்தையும் மற்றவர்களின் மனதில் பதியும் படியாகத் தெளிவாக விளக்குவதில் மிஸ். விஜேசிங்க கைதேர்ந்தவள். நான் எனது மனதில் எழும் பைத்தியக்கார, எண்ணங்களை ஒதுக்கி விட்டு மிஸ். விஜேசிங்கவின் பாடம் பற்றிச் சிந்திக்கத் தலைப்படுகிறேன்.

மிஸ். விஜேசிங்கவின் விரிவுரை ஒரு நடுச் சந்திபோல் எனக்குத் தோன்றுகிறது. நடுச் சந்தியில் நின்று கொண்டிருக்க யார்தான் விரும்புவார்கள்? முன்னுக்குச் செல்ல வீதிகள் இருக்கும்போது சந்தியில் நின்றுகொண்டிருக்கும் எண்ணம் யாருக்காவது ஏற்படுமா, என நினைக்கத்தோன்றுகிறது!

மாணவிகள் ஜனநாயகம் பற்றிய விரிவுரையை மிக மிக விருப்பத்துடன் செவிமடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரமான எண்ணங்களாம்...... பேச்சுரிமையாம்... தாம் விரும்பும் தொழிலைத் தேடிக்கொள்ளும் உரிமையாம்... என்ன பைத்தியக்காரத் தனமான உரிமை... மண்ணாங்கட்டி மிஸ். விஜேசிங்கவின் தலை...

இருந்தாற் போலிருந்து மிஸ் விஜேசிங்க நாற்காலியிலிருந்து எழுந்து கரும்பலகைக்கு அருகில் செல்கிறார் மிஸ். விஜேசிங்க எழுந்த போது நாற்காலி பின்னுக்குத் தள்ளப்பட்டது போன்று, எனது மனமும் பின்நோக்கித் தள்ளப்பட்டது.

நானும், பேனையையும் குறிப்புப் புத்தகத்தையும் அருகே இழுத்து எதையோ எழுதுவதுபோல் தயாராகிக்கொண்டு, மிஸ். விஜேசிங்கவின் பின்புறத்தைப் பார்த்தபடி இருக்கிறேன்.

இனி அடிக்கப்படும் மணி இடைவேளையைக் குறிப்பதாகும். இன்று இடைவேளையின் போது, நான்கு இல்லங்களினதும் தலைவிகள் கூடிக்கலந்துரையாட வேண்டி உள்ளது. தவணை முடிவில் நடை பெறும் விளையாட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் பற்றி அப்போது பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

# ஒரு துளி

செங்கதிர் சூரியன்
பொங்கல் படையலை
புசித்து மகிழ்வதற்கு
விஜயம் செய்தான்
எந்தையும் தாயும்
விழுந்து வணங்கி
அமுது படைத்து
அவனருள் பெற்றனர்
வந்த கதிரவன்
பொங்கல் புசிக்கு முன்னே
எங்கோ வெடியோசை
இங்கே இடியோசை
எங்கள் நெஞ்சங்களில்
கொஞ்சமும் பொறுக்கவில்லை
அவர்கள் எங்களைப்
பொங்கலும் புசிக்கவிடவில்லை
வீதிகள் தோறும்
வெண் கொடி ஏந்திய
மக்கள் கூட்டம்
ஆலயங்கள் தோறும்
அனைவரும் தஞ்சம்
இளைஞர்கள் கைது
யுவதிகள் கற்பழிப்பு
உடமைகள் அழிப்பு
உயிர்கள் பறிப்பு
ஆண்டவன் திருவடியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட்டுப் போட்டியை நடத்துவது போலில்லை. எனது தலைக்குத்தான் வேலை அதிகரிக்கும் வேலை அதிகரிப்பது பற்றி எனக்கு எதுவும் இல்லை. ஆனால் எனது மனம்...

இருட்டறைக்குள் ஒளிந்திருக்கும் மனம் — அது எங்கணும் பாய்ந்து ஓடித் திரிந்துவிட்டுப் பின்னர் என்னிடமே வருகிறது.

இருந்தாற்போலிருந்து மழை சோவெனப் பெய்யத் தொடங்கியது. வீம்புக்கு வரும் சண்டியனை போல, வராந்தாவையும் தாண்டி வகுப்பறைக்குள் தூவானம் பாய்ந்தது. மழையைப் பொழிவதற்காக இவ்வளவு நேரமும் வானம் இருண்டு தயாராகியதை நான் உணரவேயில்லை.

காலையில் தோய்த்து நீலம் போட்டு உலர வைத்திருந்த கவுனை அம்மா மறக்காமல் உள்ளே எடுத்து வைத்தாவோ என்னவோ?

கவுன் உலராமல் இருந்தால், நாளைக்குப் பாடசாலைக்கு அணிந்து வரக் கவுன் இல்லை. இந்தக் கவுனும் நன்றாக நிறம் மங்கி விட்டது. எப்படியும் இரண்டு நாட்களுக்கு மேல் ஒரு கவுனை அணிய முடியாது.

தலையைத்தாழ்த்தி நான் அணிந்திருக்கும் கவுனை நோட்டமிடுகிறேன். எனது உடையில் ஒரு செலுலாயிட் பெட்ஜ்! மாணவத் தலைவி என அதில் பொறிக்கப்பட்டிருக்கிறது.!

அப்பா வேலையிழந்த நாளில் இருந்து கஷ்டம், துக்கம். பிரச்சினைகள் ஆகியவை எங்களைச் சுற்றிக் கொண்டே வருகின்றன, என நான் நினைக்கிறேன்.

''கவுன் நிறம் மங்கி விட்டது அல்லவா..., சப்பாத்து என் ஒரு மாதிரியாக இருக்கிறது . தலையில் றிப்பன் இல்லையே... இனி இப்படி வந்தால் 'மைனஸ் மார்க்' தான் தருவேன்.. உனது ஹவுஸ் என்ன....?''

அசுத்தமாக, அழகாக உடையணியாத மாணவிகளைக் கண்டால் இப்படி நான் எச்சரிப்பதுண்டு. அது எனது கடமை. பாடசாலையின் கௌரவத்தைக் காப்பாற்றக் கூடிய வகையில் மாணவிகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது எனது கடமை....

மண்ணாங்கட்டி, கடமை.... பொறுப்பு! உரிமை! இவைபற்றி அரசமைப்புப் பாடத்தில் எவ்வளவோ கூறப்படுகிறது . மிகப் புதுமையாக அவை கற்பிக்கப்படுகின்றன. என்றாலும் இந்த உரிமை பற்றிப் பேசியதால் தான் என் அப்பாவின் வேலையும் பறிபோனது!

எப்படியிருந்த போதிலும், எப்பாடுபட்டேனும் அப்பா எனக்கு புது கவுன் ஒன்று தைத்துத் தருவார். என்னிடம் இப்போது இருப்பது, மூன்றே மூன்று கவுன்தான். மழை நாட்களில் வெள்ளை கவுன்களுக்கு நீலம் போட வேண்டாம் என அம்மா அடிக்கடி கூறுவார். நீலம் போட்ட உடைகள் வெய்யிலில் சரியாகக் காயா விட்டால் ஒரு வித நாற்றம் அடிக்கும்.

"கவுன் நிறம் மங்கி இருக்கிறது! சப்பாத்து, மேஸ் அசுத்தமாகி உள்ளது! தலையில் ரிப்பன் இல்லை!' - இப்படிக் கூறி மாணவிகளை எச்சரிக்கும்போது, இல்ல மார்க் புத்தகத்தில் "மைனஸ்" அடையாளம்போடும் போதும் சில வேளைகளில், எனது உடையைப் பற்றியும் நான் நினைப்பதுண்டு.

அனைவரும் சரணடைந்தும்
அவங்களின் கெடுபிடியில்
யாருமே விடுபடவில்லை
காற்றோடு வரும்
கண்ணீர் செய்திகள்
நேற்றொரு தாக்குதல்
இன்றொரு தாக்குதல்
என்றைக்கும் அதுதான்
வென்றுதான் வீழ்வது
என்று சொல்லுவோர்
விழுதொடு ஆலினை
வெட்டி வீழ்த்திட
முலை மறந்த குழந்தைகளின்
கரங்களில் இருந்து
எழுதுகோலைப் பறித்து
கொலை வெறி ஊட்டி
துப்பாக்கி கொடுத்து
தளிர் விடும் மழலைகளை
போர் முனைக்கு அனுப்பினரே
மார்பினில் குண்டேந்தி
மழலைகள் இறந்தும்
மாறவில்லை மனங்கள்
மீளவில்லை மக்கள்
தொடர்ந்திடும் யாகம்
சுதந்திரத்தின் பெயரால்
நிரந்தர வாழ்வில்
நிம்மதி இழந்த மக்கள்
பேசா மடந்தைகளாய்

www.tamilarangam.net

நீலம் போடாமல் துவைத்து அணிந்தால் வெள்ளைக் கவுண் ஒரு விதமாக இருக்கும். கவனயீனம் காரணமாக இல்லாமல், சில வேளைகளில் இயலாத் தன்மையாலும் பாடசாலைக்கு அசுத்தமாக வரும் மாணவிகளும் இருக்கலாம் எனச் சில நேரங்களில் நான் நினைப்பதுண்டு எனினும், நான் என்ன செய்ய முடியும்? நான் பாடசாலையின் காவல் நாய் அல்லவா?

ஜனநாயக ஆட்சி நிலவும் நாடுகளில், ஏகாதிபத்திய நாடுகளில் உள்ளது போன்று மனிதர்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட மாட்டாது. மனிதர்கள் தத்தமது அனுபவங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கு, அதாவது பொருளாதாரத் துறையில்போன்று, சமூகத்துறைகளில் முன்னேறுவதற்குச் சுதந்திரம் உண்டு. ஜனநாயக ஆட்சி மனிதர்களின் சிந்தனைக்கு, பழக்க வழக்கங்களுக்கு கட்டுப்பாடோ முட்டுக்கட்டையோ போடாது"

மிஸ். விஜேசிங்கவின் குரல் தற்செயலாக இருட்டில் கேட்பது போன்று எனக்குக் கேட்கிறது. மனமும் சிலகணம் அந்தக்குரலில் லயிக்கிறது. பின்னர் மீண்டும் வேறு குறுக்கு வழியில் விழுந்து ஓடுகிறது.

மிஸ். விஜேசிங்க கூறும் அந்தச் சுதந்திரம் மிகப் புதுமையானதாக எனக்குத் தோன்றுகிறது. ஒரு மனிதனின் சுதந்திரம் இன்னும் ஒரு மனிதனின் சுதந்திரத்தைப் பறிப்பதற்கும், அழிப்பதற்கும் பேயைப் போன்று எந்த நேரமும் செயல்படுகிறது என்றே எனக்குத் தோன்றுகிறது.

யாருடையதோ கால் ஒன்று இருந்தாற் போலிருந்து என் காலில் பட்டது. நான் விஜிதவின் முகத்தை உற்றுப் பார்த்தேன் என் காலில் இடித்தவள் அவள்தான்.

"என்ன" விஜித கேட்டாள். நான் சிரித்தபடி விஜிதவின் கடிகாரத்தில் நேரம் பார்த்தேன். இன்னும் பத்தே நிமிடங்கள்!

மிஸ். விஜேசிங்க கரும்பலகைக்கு அருகில் நின்றபடி விரிவுரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். மண்ணாங்கட்டி விரிவுரையைச் செவி மடுக்க எனக்கு விருப்பமில்லை.

வராந்தா வழியாக வந்த ஒரு மாணவி எமது வகுப்புக்குள் நுழைந்தாள். நாளை தொடக்கம் பாடசாலை முடிந்த பின்னர் விளையாட்டுப்பயிற்சி இருப்பதாக அறிவிக்கும் அறிவித்தலை அவள் கொண்டுவந்தாள்.

இதற்கிடையில் விஜிதா எனக்கருகில் ஒரு கடதாசித் துண்டைப் போட்டாள். "என்ன யோசிக்கிறாய்?" துண்டில் எழுதியிருந்தது. "உன்னுடன் பாய்ந்து ஓட" இப்படி அதே காகிதத் துண்டில் பதில் எழுதி, விஜிதவின் அருகில் போட்டேன்.

துண்டை எடுத்துப் பார்த்த விஜிதா, கைக்குட்டையால் வாயை மூடிக்கொண்டு சிரிக்கிறாள். அவளுடைய பொடியன் புதிதாக அந்தக் கைக்குட்டையைக் கொடுத்திருப்பான்! மண்ணாங்கட்டி! நேரம் போக மாட்டேன் என்கிறது.

நாளையிலிருந்து விளையாட்டுப்பயிற்சி 'இழவு' ஆரம்பித்தால் அந்திவரை பாடசாலையிலேயே இருக்க வேண்டி வரும் பகலில் சாப்பிட ஏதாவது கட்டிக்கொண்டு வரவேண்டும். என்ன வதை இது?

நடைப் பிணங்களாய்
வாழ்பவர் பலருண்டு
நெஞ்சு பொறுக்காத
கொஞ்ச மக்களும்
சொன்ன கணநேரத்தில்
பொட்டிட்டு மறைந்தவரும்
பூவாங்கி இறந்தவரும்
தப்பித் தவறியவர்கள்
தாயகத்தை விட்டெங்கோ
தஞ்சம் புகுந்தனரே
அவர்கள் வாழ்வெப்படியோ?
ஈழத்தில் வாழும்
எங்கள் மக்கள்
இன்று அழைப்பது
சுதந்திரம் வேண்டாம்
விடுதலை போதும்
நின்மதிக் காற்று
நிரந்தரமாய் வரட்டும்
தற்காலிக ஆறுதலுமில்லை
நிரந்தர உண்மைகளும்
வெறுந்தரைப் புழுதியாய்
விண்ணில் கலக்கிறது
என் கண்கள் கலங்குகிறது
கைகள் நடுங்குகிறது
மையூற்றுப் பேனாவிலும்
மையூற்று நின்றுவிட்டது....

V. கண்ணன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாண் துண்டு ஒன்றை சுற்றிக் கொண்டு வரலாம் அதனுடன் வெங்காயச் சம்பல், தேங்காய்ச் சம்பல் கொஞ்சம் கொண்டு வரலாம்.

பட்டர் பாண், ரோல்ஸ் சாப்பிடும் கும்பலுக்கு மத்தியில், அதனை எப்படி சாப்பிட முடியும்? இடியப்பம் நான்கைந்தைச் சுற்றிக் கொண்டு வரவேண்டும். அதைச் சாப்பிட்டு முடிந்து கையை அலம்பு முன்னரே மீண்டும் பசி வருமே! இடியப்பத்தோடு மூன்று நான்கு மணிநேரம் இருப்பது கஷ்டம்தான் பாண் துண்டு ஒன்றைச் சாப்பிட்டாலும் அது இறுக்கிப் பிடிக்கும்.

எப்படியோ சக மாணவிகளின் மத்தியில் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடிய வகையில் ஏதாவது கொண்டுவர வேண்டும் இந்த நாசமாய்ப்போன உலகத்தில் சாப்பிடுவதிலும், குடிப்பதிலும், உடுப்பதிலும் தானே அந்தஸ்து இருக்கிறது...

இன்று காலையிலும் புதிய கவுண் பற்றி அப்பாவிடம் கூறினேன். அதை நான் ஞாபகப் படுத்தும் போதெல்லாம் அவருக்கு ஒரு விதமான சிரிப்பு வருகிறது. விளையாட்டு விழாவுக்கு எப்படியும் புதுக் கவுண் வேண்டும். இன்று பாடசாலைக்கு வரும்போது அதையும் அப்பாவிடம் ஞாபகப்படுத்தினேன். அவர் அப்போதும் சிரித்தார். ஒன்றும் சொல்லவில்லை.

''சிரிப்பது சரி, எனக்குக் கவுண் கிடைத்தால் போதும்—'' தலையை வாரிக் கொண்டிருந்த நான், சீப்பில் சிக்குப்பட்டு உதிர்ந்த முடியை அப்பாவின் சட்டைப் பைக்குள் போட்டுவிட்டு கைகொட்டிச் சிரித்தேன்.

''ஏய் சாத்தான்'' அப்பா செல்லமாகக் கத்தினர். அப்போது புதிதாக மேஸ் ஒரு ஜோடியும் வாங்கி வருமாறு கூற நினைத்தேன். ஆனல் அதைக் கூறவில்லை. கவுண்பற்றி ஞாபகப் படுத்தும்போது சிரிக்கிருரே. ''இயலாத ஒன்றை எப்படிப் பெண்ணே செய்வது?'' என என்னிடம் சொல்வது போல இருக்கிறது அவர் சிரிப்பு. இப்படி இருக்கப் புதிய மேஸ் பற்றி எப்படி அவரிடம் கூறமுடியும்?

பாடசாலையில் வழிபாட்டுக்குச் சென்ற நாளே எனக்கு நினைவில்லை. மாணவிகளுடன் போனல் சப்பாத்தைக் கழற்றும்போது மேஸில் உள்ள கிழிசல்கள் தெரியும். எனவே வழிபாட்டுக்குச் செல்வதையே நிறுத்திவிட்டேன். கோயில் வாசலில் நின்றபடி சில வேளைகளில் வழிபாடு செய்திருக்கிறேன்.

புத்த பெருமான என்மீது கோபபடமாட்டார் என்பது எனக்குத் தெரியும். 'ஒ... புத்த பெருமானே! மறுலோகத்தில் எனக்குக் கிடைக்கும். புண்ணியத்திலும் பார்க்க இந்த லோகத்தில் இப்பொழுது கிடைக்கும் அவமானத்திலிருந்து விடுபடுவது எனக்கு மேலானது. அதனல் தான் உங்கள் அருகில் வந்து வழிபாடு செய்வதில்லை.

பாடசாலையில் நான் அனுபவிக்கும் இப்படியான கஷ்டங்கள் பற்றி தந்தையிடம் கூற நான் விரும்புவதில்லை. அவற்றைக் கூறும் போது கண்ணீர் வடிக்க நேரிடும். நான் அழுதால் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கூடத் துக்கம் வரும்.

எவ்வளவு தான் கஷ்டம் இருந்தாலும், நாங்கள் மூவரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். அந்த மகிழ்ச்சியே எங்களுக்குப் போதும். அரைமுத்தல் மாவினல் இரண்டு மூன்று ரொட்டி சுட்டுச் சாப்பிட்டு

# வழிப்போக்கன் வார்த்தைகள்

உங்கள் பட்சிகள் எங்கே
காடுகளே!

உங்கள் பூக்களை
வண்டுகளுக்கு முன்பே
வாசித்தவர் எங்கே சோலைகளே!

தேயிலைக் கொழுந்து
கிள்ளியவன் சந்ததி
தேயிலைக் கொழுந்தாய்
கிள்ளப்பட்டதோ?

இன்னும்
மேகம்பாடும் மெல்லிசையாய்
பொழியத்தான் பொழிகிறது மழை!

நனையத்தான் ஆளில்லை.

இன்னும்
கிளைகளின் மீது
வசந்தம் போடும் கையெழுத்தாய்
பூக்கத்தான் பூக்கின்றன மலர்கள்!

பறிக்கத்தான் ஆளில்லை.

எங்கே?

இந்த மண்ணின்
பூர்வீக புத்திரர்கள் எங்கே?

சொந்த தேசத்தில்
உயிர்களைப் புதைத்துவிட்டு
தூர தேசங்களில்...
உடல்கள்! உடல்கள்!

வெறும் உடல்கள்!

ஈழத்தோழர்!

உந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே

இன்று

தந்தையின் எதிரே
தாயின் துகிலை
உரிந்ததும் இந்நாடே.

காதலியோடு
கைவிரல் கோத்துக்
களித்ததும் இந்நாடே!

இன்று
காதலன் சிறைக்குள்
காதலி தரைக்குள்
முடிந்ததும் இந்நாடே!

சின்ன வயதில்
சடுகுடு விளையாடக்
கிழித்த கோடாய்
தடயங்கள் இல்லாத
குடும்பங்கள் ஆயிரம்!

ஒரு விதவையின்
முதலிரவு நினைவுகளாய்
துரத்தப்பட்டவரின்
மணவாசனை ஞாபகங்கள்!

அழகான தீவு இது!

www.tamilarangam.net

விட்டு, வெறும் தேநீரைக் குடித்து நாம் சந்தோஷமாக உறங்குகிறோம். அந்தச் சந்தோஷம் தான் எங்களுக்குப் பெறுமதியானது. எனவே பாடசாலையில் நடப்பவற்றை, வீட்டில் நான் கூறுவதில்லை.

பாடம் முடிய இன்னும் நான்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும் பேனாவை ஒரு புறத்தில் வைத்துவிட்டு நாற்காலியில் நிமிர்ந்து உட்காருகிறேன். மிஸ். விஜேசிங்கவின் முகமெல்லாம் வியர்வைத் துளிகள். அடுத்த வாரம் ஒரு கட்டுரை எழுதிவரும்படி கரும்பலகையில் எழுதியிருக்கிறார்.

"ஜனநாயக ஆட்சியின் கீழ் மனிதர் அனுபவிக்கும் சுதந்திரம் பற்றி விபரிக்குக" என்ற கட்டுரை தலைப்பின் வாசகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, மிஸ். விஜேசிங்கவின் கையெழுத்து, மிக அழகாகத் தோன்றுகிறது.

அடுத்த கணம் ஒலிக்கப்போகும் மணியை நான் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன். அத்துடன் யன்னலின் ஊடாகப் பார்வையைச் செலுத்தி வானத்தையும் பார்க்கிறேன். அது இருண்டுதான் இருக்கிறது. கால மாறுதலை காட்டப் போகும் மணியைக் கேட்க எனது இருகாதுகளும் தயாராக இருக்கின்றன.

சிங்கள மொழியிலிருந்து ——.

கருணா பெரேரா
(தமிழில்: 'தேவமலர்')

("அந்துருட்ட எலிய" சிறுகதை தொகுதியிலிருந்து)

உலகப் படத்தில் ஒரு
தேன்கூடு!

இப்போது
வண்டுகள் பூக்களில்
கண்ணீர் எடுக்கின்றன

இப்போதும்
அருவி விழுகிறது
ஆலோலம் இல்லாமல்.

இப்போதும்
குயில் கூவுகிறது
நாக்கைக் கழற்றி வைத்துவிட்டு.

பிணங்களுக்காகத்தான்
சுடுகாடு தயாரிக்கப்பட்டது.

இங்குதான்
சுடுகாட்டுக்காகவே
பிணங்கள் தயாரிக்கப்பட்டன!

இந்த ரத்தப் பெருக்கின்
நதிமூலம் எது?

முதலில் வெடித்தது
எவர் துப்பாக்கி?

முதலில் விழுந்தது
எவரின் பிணம்?

இந்த ஆராய்ச்சிகளை
சோதனைக் கூடத்திற்கு
அனுப்பி விடுங்கள்!

இப்போது தேவை
காயத்திற்கு மருந்து

இப்போது தேவை
தாகத்திற்கு நீர்

இப்போது தேவை
என் தோழர்களுக்கெல்லாம்
தோள்.

இப்போது தேவை
இந்த
இந்த வழிப்போக்கன் வார்த்தைக்கு
மரியாதை.

(இன்னொரு விமானத்திற்கான இடைவெளியில் கொழும்பில் கொஞ்சநேரம் தங்க நேர்ந்தபோது)

**வைரமுத்து**

## தேனீயின் புதிய முகவரி!

வாசகர்களே,

தேனீக்கான உங்களுடைய ஆக்கங்கள், அன்பளிப்புக்கள் மற்றும் சகல கடிதத்தொடர்புகளுக்குமான முகவரி:

THENEE
c/o S:SIVANESAN,
Im Wacholder 11,
7151 ALLMERSBACH im TAL.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்பு

சென்ற வருடம் ஹேர்ண நகரில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச்சந்திப்பின் ஐந்தாவது நிகழ்ச்சி பிராங்பார்ட் நகரில் 23.9.1989 திகதி நடைபெற்றது.மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் புதுமை, சிந்தனை, தேனீ, வெகுஜனம், தூண்டில் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவினர்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் கலந்து கொண்டனர்.

முற்பகல் 11.15க்கு திரு.பாலசுப்பிரமணியத்தின் வரவேற்புரையுடன் இலக்கியச்சந்திப்பு ஆரம்பமாகியது. வருகை தந்தோரின் சுயஅறிமுகத்தின் பின் வாசகர் விமர்சனம் இடம்பெற்றது. புதுமை, தேனீ, சிந்தனை, தூண்டில், கலைவிளக்கு, வண்ணாத்துப்பூச்சி, வெகுஜனம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்கள் விமர்சிக்கப்பட்டன. பத்திரிகை ஆசிரியர் குழுவினர் விமர்சனங்களுக்குப் பதிலளித்தார்கள்.

"பெண் ஒடுக்குமுறையின் ஆரம்பம்" என்ற விடயம் பற்றி உமா, றஞ்சனி, வேலாயுதம் ஆகியோரினல் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து இவ்விடயம் பற்றி சமூகமளித்தவர்களின் கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றன. அடுத்து திரு.சுசீந்திரன் "புகலிட இலக்கியம்" பற்றிய கட்டுரை ஒன்றை வாசித்தார்.

திரு.நித்தியானந்தன் "இலக்கியத் திறனாய்வு" என்ற தலைப்பில் உரையாற்றினர்.

"நாம் யார்க்கும் குடியல்லோம்" என்ற தலைப்பில் ஒரு கவிதாநிகழ்வு அடுத்து இடம் பெற்றது. சிவம்,ராகவன், ரஞ்சித்குமார், சுசீந்திரன், வேலாயுதம், சுந்தரலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்களித்தனர்.

மேற்கு பேர்லின் குழுவினரின் நாட்டுப்பாடல்களுக்குப்பின் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகியவை பற்றிய விபரங்கள் வாசிக்கப்பட்டன.

அடுத்த இலக்கியச்சந்திப்பு மேற்கு பேர்லினில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. மேற்கு பேர்லினில் இருந்து வந்தவர்களும், சிவசோதி, வாணிதாசன் ஆகியோரும் இலக்கியச்சந்திப்புக்குழுவில் இடம் பெறுவார்கள் என தலைமைதாங்கிய திரு.லோகநாதன் அறிவித்தார். திரு.பாலசுப்பிரமணியத்தின் நன்றியுரையுடன் சந்திப்பு முடிவடைந்தது.

ஆறுவது இலக்கியச்சந்திப்பு பற்றிய தகவல்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
Tagung von Tamilen,
*Bildungswerk fur Democratie und Umweltschutze e.V.*
*Zeughofstr.20,*
*1000Berlin36.*
*Tel:6126074/5*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சுபொறுக்குதில்லையே.......

எமது நாட்டில் நடாத்தப்பட்டுவரும் வெறித்தனமான தனிநபர்கொலைகள் இன்னும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. இன்று எமது மண்ணில் கடத்தப்படுவது, கொலை செய்வது என்பன சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் தமது உயிரை மதிக்காது, தமது சொந்த மண்ணிலிருந்து செயலாற்றும் புத்திஜீவிகளும், புணரமைப்பு வேலைகளில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் சமூகசேவையாளர்களும், ஜனநாயகத்திற்காக தமது கடமையைச் செய்த அரசாங்க அதிபர்களும், மனித உரிமைப் போராட்டங்களில் தம்மை அர்ப்பணித்தவர்களும், மாணவர்களுமே இவ்வாறு அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இக்கொலைகள் நிறுத்தப்படாமல் இன்னும் கூடிக்கொண்டே வருகின்றது.

இப்படியாக இவர்களால் நடாத்தப்படும் கொலைகளின் பட்டியல் சமீபத்தில் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக, மருத்துவபீட விரிவுரையாளர் திருமதி.ராஜனி திராணகம வரை நீண்டுள்ளது. இத்தகைய கொலைகளைப் பார்த்துவிட்டு கண்மூடித்தனமாகவிருந்தால்,மக்கள் நலனுக்காக போராடுபவர்கள் அற்றுபோய்விடுவார்கள்.

தொடர்ச்சியாக உயிரைத் தூசாக மதித்து நடாத்தும் கொலைகளினால்,தொடர்ந்து எமது மண்ணில் ஒரு கொடூரமான எண்ணங்கொண்ட சமுதாயத்தையே உருவாக்கும்.

கருத்து முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஒரேயொரு வழி கொலை தான் என எண்ணினால், நாம் செய்யும் எந்தச் செயலுக்கும் அர்த்தமில்லாது போய்விடும். பொதுவாக வடபகுதியில் வாழும் மக்களின் மனோநிலைக்கேற்ப கல்வி கற்று, பட்டம் பெற்றபின், தமது அந்தஸ்திற்காக தமது பதவியைப் பாவிப்பவர்கள் மத்தியில், பொதுநலத்திற்காக புணரமைப்பு வேலைகளிலேயோ, மனித உரிமைகளுக்கான வேலைகளிலேயோ தம்மை ஈடுபடுத்துபவர்கள் மிகவும் அரிது.

கடந்த வருடம் சமூகசேவையாளர் கந்தசாமி கடத்தப்பட்டு மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டார். கடந்த காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புணரமைப்பு செய்வதற்காக பாடுபட்ட இவர் கொலை செய்யப்பட்டது மிகவும் வேதனைக்குரியதொன்றாகும். இந்த நிலமைகளில் ஒருவித பாதுகாப்பும் அல்லாதிருக்கும் மக்களின் நிலை என்ன?

தனது கடமையைச் சரியாக செய்தமைக்காக அரசாங்க அதிபர், பஞ்சலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். இன்னும் பெயர் தெரியாத எத்தனையோ முகங்கள் கொல்லப்பட்டு கொண்டு இருக்கின்றார்கள். விஜியானந்தன், அண்ணாமலை போன்ற எத்தனையோ இடதுசாரிகளின் உயிர்கள் மிகவும்" இரகசியமாக" எடுக்கப்பட்டுவிட்டன.

தற்போது நிலவும் எந்த அராஜகத்தையும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும் தான் உயிருக்கு உத்தரவாதம்!

புணரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட வைத்தியர் ஞானசேகரன் சமீபத்தில் கடத்தப்பட்டிருக்கிறார். இவரது விபரங்கள் எதுவும் தெரியாத நிலையிலேயேயுள்ளது. இவ்வாறு காட்டுமிராண்டித்தனமாக போல புத்திஜீவிகளையும், சமூகசேவையாளர்களையும் அழித்தொழித்தால், நாளை எமது நாட்டின் நிலை.....

இப்படிப்பட்ட கண்மூடித்தனமான கொலைகள் கண்டிக்கப்படவேண்டும்.

ஊர்குருவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இந்தியப் பொதுத்தேர்தல்.

இந்தமாத இறுதியில் நடைபெறவிருக்கும் இந்தியப்பொதுத்தேர்தல் சகல அரசியல் அவதானிகளுடைய கவனத்தையும் ஈர்ந்துள்ளது. இந்திராகாந்தியின் படுகொலையின் பின் எழுந்த அனுதாப அலையில் பெருவாரியான ஆசானங்களைக் கைப்பற்றி 'திருவாளர் பரிசுத்தம்'என்ற பெயருடன் பதவிக்கு வந்த ரஜீவ்காந்தி பெரும் ஊழல் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்கின்றூர்.

1977 இல் இடம்பெற்றது போல, ஆளும் கட்சியான காங்கிரசை எதிர்த்து ஐக்கியப்பட்ட எதிர்க்கட்சிகள் 350 தொகுதிகளில் ஒரே எதிர்க்கட்சி வேட்பாளரை நிறுத்தியுள்ளனர். காங்கிரஸ் 509 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. எதிர்கட்சிகளின் முக்கியமான ஐக்கியமுன்னணியான தேசியமுன்னணி 375 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. ஹிந்தி பேசும் பகுதிகளிலிருந்து 225 பிரதிநிதிகள் லோக்சபைக்குத் தெரிவுசெய்யப்படுகின்றனர். இந்தப் பகுதிகளில் அதிகமான ஸ்தானங்களைப்பெறும் கட்சியே ஆட்சியை அமைப்பது சாத்தியமாகும்.

ஆகஸ்ட் மாதம் 'இந்தியா டுடே'யின் அனுசரணையுடன் 'மாக்கற் அன்ட் றிசேர்ச் குருப்' நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பு பின்வரும் முடிவுகளைத்தந்தது.

பிளவுபட்ட நிலையில் எதிர்க்கட்சிகள் காங்கிரசுடன் போட்டியிடும் பட்சத்தில் காங்கிரஸ் 314 ஸ்தானங்களையும், எதிர்கட்சிகள் 195 ஸ்தானங்களையும், சுயோச்சை மற்றும் இதர கட்சிகள் 33 ஸ்தானங்களையும் பெறுமெனவும்; ஐக்கியப்பட்ட நிலையில் எதிர்கட்சிகள் காங்கிரசுடன் மோதும் பட்சத்தில் காங்கிரஸ் 244 ஸ்தானங்களையும், எதிர்கட்சிகள் 260 ஸ்தானங்களையும், சுயோச்சை மற்றும் இதர கட்சிகள் 38 ஸ்தானங்களையும் பெறுமெனவும் கணிக்கப்பட்டது. இன்று எதிர்கட்சிகளின் ஐக்கிய முன்னணி ஒன்று உருவாகியிருப்பதால், காங்கிரசுக்கு 1977இல் ஏற்பட்டது போல ஒரு தோல்வி ஏற்படும் சாதிதியக்கூறுகள் பலமாக உள்ளன.

ரஜீவ்காந்தியின் பதவிக்குப் போட்டியாளராக விளங்கும் வி.பி.சிங், போபர்ஸ் பிரங்கி கொள்வனவில் கொடுக்கப்பட்ட 'கமிஷன்'கள் பற்றிய தகவல்களை ரஜீவ் வெளியிடத்தயங்குவதாக பெரும் ஊழல்க்குற்றச்சாட்டுக்களை அவருக்கு எதிராகப் பாவித்து வருகிறூர். இது சம்பந்தமாக லோக்சபையைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் தமது பதவிகளை ராஜினுமாச் செய்தனர். ஆனுல் இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் வாக்காளரை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பது கேள்விக்குறியாகும். இந்தப் பீரங்கி ஊழல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவகாரம் மத்தியதரவர்க்கத்தினர் மத்தியிலேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலில் வாக்களிக்கும் பெரும் தொகையான வாக்காளர்கள் கிரமங்களிலேயே வாழுகின்றுர்கள்.

மறுபுறத்தில் மத்தியப்பிரதேசம், பீகார், ராஜால்தான், குஜராத், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இடம்பெற்ற இனக்கலவரங்களும், அயோத்தியில் முல்லீம் பள்ளிவாசலுக்கருகில் ராமர்கோவிலைக்கட்ட பாரதியஜனதா கட்சித்தலைவர்கள் செய்யும் முயற்சிகளும் இந்து-முல்லிம் மக்களுக்கிடையில் பதட்ட நிலையை உருவாக்கியுள்ளது. இந்த நிலமைகளில் முல்லீம் வாக்காளர்கள் காங்கிரசை ஆதரிப்பார்கள் எனச்சில அரசியல் அவதானிகள் கருதுகின்றுர்கள், ஆனுல் காங்கிரல் அரசாங்கம் தம்மைப் பாதுகாப்பற்ற நிலமைகளில் வைத்திருந்ததற்காக முல்லீம் வாக்காளர்கள் அதற்கெதிராகவும் திரும்பலாம்!

இவை எல்லாவற்றையும் விட விஷம் போல் ஏறியிருக்கும் விலைவாசிகளே மக்களை வெகுவாகப் பாதிக்கும் விடயமாக உள்ளது. மேற்குறிப்பிட்ட அபிப்பிராய வாக்கெடுப்பின்படி 44%மான மக்கள் விலைவாசிகளின் உயர்வையும், 36%மான மக்கள் ஊழல்களையும்,13%மான மக்கள் வகுப்புக்கலவரங்களையும், 7%மான மக்கள் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றையும் முக்கியமானவையாகக் கருதினுர்கள்.

எதிர்கட்சிகளின் ஐக்கிய முன்னணி வெற்றிபெறும் பட்சத்தில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்த முடியுமா என்பதிலேயே பலருக்கும் ஐயமேற்பட்டுள்ளது. ஐக்கிய முன்ணிக்குள் இருக்கும் கட்சிகளின் கொள்கை வேறுபாடுகளும், தலைவர்களின் வகுப்புவாத நிலைப்பாடுகளும், அவர்கள் மீது இருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்களும் இந்தச் சந்தேகங்களுக்குக் காரணமாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த 42 வருடங்களில் 40 வருடங்கள் காங்கிரல் ஆட்சி நடைபெற்றது. இரண்டு ஆண்டுகள் ஜனதா ஆட்சி நடைபெற்றது. அடுத்து ஏற்படப் போவது...........!!!!!!!

எல்.அரசன்.

தேனீ

இரு மாதங்களுக்கொருமறை வெளிவருகின்றது.

ஆசிரியர்குழு _தேனீக்கள்

தனி இதழ் _ 3 டி.எம்

வருடசாந்தா_20 டி.எம்

ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத் தொடர்புகளுக்கும்

THENEE
c/o S.SIVANEASAN,
Im Wacholder 11,
7151 ALLMERSBACH im Tal.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்.

தேனீக்களுக்கு,

தேனீ -புரட்டாதி இதழுக்கான எனது விமர்சனம்.

## அட்டைப்படக்கவிதை

"மனித நேயங்களை"-பன்மையில் குறிப்பிடுகின்றீர்களே.பலவிதமான மனித நேயங்கள் இல்லையே.அப்படி இருக்குமாயின் ஒவ்வொரு மனித நேயம் இருக்கும்.புலி மனிதநேயம்,E.P.R.L.F மனிதநேயம், அரசு மனித நேயம், இப்படிப் பல.....மனிதநேயம் ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும் தோழரே.

மனிதநேயத்தின் அடிப்படையில் வளர்வதுதான் மனிதத்துவம். ஆகையால் மனிதநேயம் எதுவோ அதுதான் மனிதத்துவம். ஆகையால் ஒன்றான இரண்டும் ஒன்றில் இருந்து பிரிந்து எப்படித் தோற்கடிக்கும் ? தாங்கள் எழுதியது போல் எடுத்துக் கொள்ளும் போது.'மரணித்த உருவங்களை' இழந்து போன மனித உருவங்களை என்கின்ற போது, உடல்தான் இறந்திருக்கின்றது என்ற உணர்வு ஓட்டத்தில் உலர்ந்த மனிதத்தையே உருவமாக்குகின்றோம். அப்போது அந்த வரி மனிதநேயம், மனிதத்துவத்தோடு ஒத்த தன்மையாகி விடுகின்றது.புதுக்கவிதையில் ஒவ்வொரு வரியும் முழுமையான பதத்தைக் குறித்து நிற்கவேண்டும். அது இக்கவிதையில் தவறுவதால் இக்கவிதை ஒன்றுக்கொன்று முரணான பிழையான கவிதையாகிவிட்டது.

இக்கவிதையை,

> மனித நேயத்தை மரணித்த
>
> மனித உருவங்களை
>
> மனிதத்துவம்
>
> ஒரு நாள் தோற்கடிக்கும்.

என எழுதும்போது சரியாகின்றது.

இப்படி எழுதும்போது மனித உருவம் என்பது மனிதத்தன்மையற்ற(மனிதத்தோல் போர்த்த மிருகம்)மனிதக்கூடு என்று பொருள்படும்.

## மௌனத்தின் கொடூரம்-துர்க்கா.

மிகவும் அருமையான,இக்காலத்தை உள்ளபடியே உணர்த்துகின்ற கவிதை.ஒருகணம் என்னை உலுப்பிய எம் மண்ணின் மௌனமொழி.அக்கவிதையைக் கேள்வியில் நிறுத்தி தேடலில் தொடரவிடுவது இன்னும் செழுமையாகவிருக்கின்றது.சில வரிகளை இப்படி எழுதினால் நன்றாக இருக்குமா?

> "தொடரும் அந்தக் கண்ணீரும்
>
> விகம்பலும் பெருமூச்சும்
>
> அடுத்த நிமிடம் கேட்கும்
>
> பயங்கரச் சத்தத்தில்
>
> அடங்கிப் போகும்!"

இதை இப்படி மாற்றுவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரியாவிடையில் இரகசியமாக இரங்கும்.

## தான் இடத்தைப் பிடிப்பார்-படை

உள்வீடு சரியானது.ஆயினும் சமூகத்தோடு ஒட்டாமல் அந்நியமாகிநின்று சபிக்கும் முனிவத்தன்மையோடு நிலமையை விலக்க வருவது-இன்றைய வளர்ச்சியில் இருந்து பின்னுக்கு நிற்கின்றது.உருவம்,முப்பது நாற்பது வருடங்களிற்கு முற்பட்ட வித்துவமொழித்தன்மையதான சொல்-வரிப்பிரயோகங்கள் மரபுக்கவிதையைப்புதுக்கவிதையாக்கிய து போல் அமைந்துவிடுவதால்,சொல்லவருவதைப் புரிந்து கொள்ள கஷ்டமாகி விடுகின்றது.

## அவள்பொதுவுடமையாக்கப்பட்டாள்-கவிதாஞ்சலி

வயிற்றுப் பசி தாளாது
தன்னையே
விற்று வந்த சுயசந்தை"

என்று கூறும் இவர்,பின்னர் சொல்கின்ருர்

"கல்யாணச் சந்தையில் சீதனப்
பேரத்தால் விலைப்படாமற் போனவள்"

என்கிருர்-எப்படி இரண்டு வேறுபட்ட நிலைமைகளையும் ஒட்டுப் போடமுடியும்.பங்களாக்கட்ட வேண்டும் என்று கஷ்டப்படுபவனையும்,மாரி வருகுதே,ஓலை இத்துப் போயிற்றே,ஒழுகப்போகுதே என்று வீடு வேய வேண்டும் என்று உழைத்துக்கஷ்டப்படுகிறவனையும் ஒட்டுப்போடமுடியுமா?

சீதனம் எப்போதுமே நடுத்தர வர்க்கப் பிரச்சினை தான்.இருக்கும் தரத்தை விட ஒரு படியென்ன பல படிகள் மேலே வாழவேண்டுமென்ற தன்மையைக் கொண்டவர்களது பிரச்சினை.சமூகத்தில் போலிக்கௌரவங்களுடன் போட்டி போட்டு வளர்க்கும்தன்மையானவர்களினது பிரச்சினை.இதை வாழ வழியில்லாதவர்களேஏடு-உண்மையான,விபச்சாரம் செய்யும் நிலைக்குத்தள்ளப்பட்டவளுக்கு காரணம் சொல்ல முயலலாமா?போதாதற்கு

"பாவியல்ல அவள் அப்பாவி"

பாவம்.கவிஞரின் பார்வையில் அவள் ஒன்றுமே தெரியாதவளோ? அல்லது தெரியாத்தனமாகச் செய்து போட்டாளோ? விபச்சாரம் செய்ய வேண்டிய அவளின் உண்மையான நிலையைப்புரிந்து கொள்ளாமல், பரிந்து பேசுவது போல் பாசாங்கு செய்யும் தன்மையான கவிதையாக இருக்கின்றது.

நியாயம்
கற்பிக்கும் தொழில்களில்
தனக்கு
எந்தப் பங்கும் இல்லாததால்....

இந்தச்சமூகத்தின் எந்தத்தொழிலுமே நியாயமற்றதுதான்.(எப்படித்தான் எழுத முடிகிறதோ.உண்மையான உழைப்பிற்கு மதிப்பு?).ஆதலால் விபச்சாரமா? அல்லது வருமானம் (பங்கு) போதுமானதாய் இல்லையோ - இருக்கவில்லையோ ? அல்லது தொழில்களில் ஒரு தொழிலுமே கிடைக்கவில்லையோ? இறுதியானதைத்தான் சொல்ல வருகின்ருர் என்று நினைக்கின்றேன். அதில் "பங்கு" என்ற சொல்லைப் பாவிக்காமல் வேறு பொருத்தமான சொல்லைப் பாவித்திருக்கலாம். நியாயம் கற்பிக்கும்..... என்று விடயத்தையும் இதனேடு போட்டுக் குழப்பியிருக்காமல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தனிப்பகுதிகளாக சொல்லி இருக்கலாம்.மேலும் கொடுமையானது, படுமோசமானது என்னவென்றால், இறுதியாகச் செல்லுகிறார்,

அவளுக்கு வாழ்வு கொடுங்கள்!

இல்லையேல் வழியைவிடுங்கள்.

யார் யாருக்கு வாழ்வு கொடுப்பது? யாரும் தருவதல்ல வாழ்வு. ஆணாதிக்க சமூகம்தான் தரவேண்டும். தாருங்கோ எனப் பிச்சை கேட்கின்றாரா?எங்களுடைய வாழ்வு எங்களிடம்தான். அது ஆண்களிடம்தான் இருக்கின்றது என்ற எண்ணத்தையே இல்லாமற் செய்ய வேண்டும். 'இல்லையேல் வாழவழியைவிடுங்கள்'- இது என்ன அவளை விபச்சாரி என இனி சொல்லால் பழியாமல் அவளுக்குஉரிய அந்தஸ்தைக் கொடுத்து விபச்சாரத்தைக் காப்பாற்றுவோம் என்பது போலாகிவிடுகினறது. விபச்சாரம் என்றால் என்ன என்பதே தெரியாமற் போகவேண்டிய சமூகத்தை உருவாக்க வேண்டுமேயொழிய இந்தச் சமூகம் உற்பத்தியாக்கும் கொடுமைகளைப் புனிதமாக்குவதல்ல.

## பெண்ணின் பூரணவிடுதலை........ -மீரா.

நல்ல காலம் தலையங்கத்திற்கு முற்றுப்புள்ளி போடவில்லை. இலங்கைப் பெண்களது யதார்தமான, சமூகப்பிற்போக்குத்தனமான நிலயைக்குறிப்பிடுவது சரியாகினும், அவர் தீர்வு சொல்லுவது - அல்லது எதிர்பார்ப்பது என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. (18ம் பக்கம்) 'எமது சமூகம் பொருளாதாரரீதியில் அபிவிருத்தியடையாத...... சமூகஉதவி வசதிகள்எமது நாட்டில் இலலை,'என்கிறார். இருந்துவிட்டால் பெண் பூரண சுதந்திரம்...(?) அடைந்து விடுவாளோ? அப்போது இங்கே ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் சுதந்திரமாகவே இருக்கின்றார்கள் என்று அடித்து சொல்லுகின்றார் போல் இருக்கின்றது.

-இன்னும் இறுதியில் சொல்ல வருகின்றார்-'இந்த சமூக அமைப்பு முறையில் பொருளாதார ரீதியில் மற்றவர்களில் தங்கி வாழாத நிலை ஏற்பட வேண்டும். என,

முதலாளித்துவ சமூக அமைப்பு முறைக்குள் எப்பிரச்சனைக்கும் நிரந்தரத் தீர்வு காணமுடியாது. இந்த அமைப்பிற்குள் ஒவ்வொரு மனிதனும் மற்றொரு மனிதனில் தங்காமல் வாழவே முடியாது.சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் வாழவேண்டும்(ஆணாக இருந்தாலும் சரி,பெண்ணாகவிருந்தாலும் சரி)என்றால் சமூக அமைப்பு மாறவேண்டும்.அதனை இந்த முதலாளித்துவ அமைப்பு முறைக்குள் மாற்றமுடியாது தாயே.

அடிமைத்துவங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார்.ஆனால் அதற்கான காரண காரியங்களைத் தெளிவாக இனம் காணத்தவறி விடுகின்றார்.இங்குள்ள(நகர்ப்புறங்களிலும் மிகவும் வசதி படைத்த குடும்பங்களிலும்)சுதந்திரம் போன்ற பிரமிப்புக்குள் தன்னையும் விடுதலையையும் இழந்து விடுகின்றார்.

## நிகழ்வுகள் - குரு

கொஞ்சம் கனதியான தலைப்பு. கதைக்கு தனித்துவமான தலைப்பு அல்ல. எனினும் போர்க்கால படைப்புகளும் இப்படியான தலைப்புக்கள் வரவேற்கத்தான் வேண்டும். கதையின் உருவம், எழுத்து நடை, சிறந்த எழுத்தாளனுக்கு உரிய தன்மையது.கதையை நன்றாகவே நகர்த்துகின்றார்.

மாஸ்ரர்:"அப்ப நான் போட்டுவாறன் தம்பி. நான் சொன்னதை வடிவா யோசிச்சுப் பாரும் என்ன"

என்னும் வரி தேவையற்றது. அதை எடுத்து விட்டிருக்கலாம். அப்படியில்லாதது நாடக பாணியாக மாறிவிடுகின்றது.

www.tamilarangam.net

இக்காலத்து இலக்கியத்திற்கு முக்கியமானது உள்ளீடுதான், உருவம் இரண்டாம் பட்சமானது. இச்சிறுகதை எதை உணர்த்தி நிற்கின்றது. நாட்டிலே வாழவேண்டுமென்று பல கஷ்ட்டத்தின் மத்தியிலும் நினைக்கின்ற மனிதநேயமிக்கவன், தவிர்க்க முடியாதபடி போராட்டங்களோடு இணைவதும், இயக்கங்களின், சதி தாக்குதலகளால் அவன் அழிந்து போவதுமான நிகழ்வுதான் இன்றைய நிலை என்பதுதானே. இன்றைக்கு ஒரு இளைஞன் சும்மா வீட்டிலே இருக்க முடியாது. வீட்டிலே ஒழிந்துதான் இருக்க வேண்டும். அவன் மனித நேயத்தில் அல்லது வாழ்வியல் போராட்டத்தில் தானுக இணைய வேண்டிய அவசியமே இல்லை. வில்லங்கமாக துப்பாக்கி முனையில் இணைக்கப்பட்டு பலிக்கடாவாக்கப் படுகிறுன். இதுதான் இன்றைய நிகழ்வு.

'உன்னை மாதிரி எத்தனை பொடியன்.....' என்று தொடங்கி 'இதுக்குப்பிறகும் இருக்கின்ற இந்த நிலைமையை சரிவரப் பயன் படுத்தாமல் விட்டால் எல்லாமே குட்டிச்சுவராய்ப் போய்விடுமெல்லே'(7ம் பக்கம்) எனக்கூறுவதன் மூலம், இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு பிற்பட்ட காலத்தை நிலை நிறுத்தும் இவர்- இக்காலத்திற்கு ஒவ்வாத வாழ்நிலைகளை கதையில் கொண்டு வருகின்ருர். அதற்கு முன்னர்- அந்த விடயத்தில் சொல்லப்பட்ட கருத்து - அபிப்பிராயம் சரியானதா என்ற ஒரு கேள்வி எழுகின்றது.

- 'எல்லாப்பிரச்சனையும் போராட்டத்தாலை தீர்க்கலாமென்டு போய் கடைசியில் தங்களையும் அழிச்ச...' எந்தவொரு பிரச்சனையையும் போராட்டத்தாலேயே தீர்க்கலாம் ( 5ம் பக்க ஆரம்பத்தில்) அதாவது இந்த சமூக அமைப்புக்குள்ளே எந்தவொரு பிரச்சனையையுமே தீர்க்க முடியாது. இந்த சமூக அமைப்பை மாற்றுவதற்காக எழுகின்றதே போராட்டம். அது ஆயுதம் தாங்கியா அல்லது அது தளர்ந்த நிலையிலா என்பது பிரச்சனை குறித்த விடயம். ஒரு முழுமையான புரட்சிக்கான தயாரிப்பு வேலைகளில் ஒரு வீதம் கூட பூர்த்தியாகாத நிலையில் இங்கே உக்கிரமான ஆயுதப் போராட்டம் ( என்ன செய்வது இன்னும் இதைப் போராட்டம் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது) நிகழ்ந்தது - நிகழ்வது எமது துர்ப்பாக்கியம்தான். ஆனல் இவர் போராட்டம் என்று முழுமையாகப் பாவிக்கும் போது, அவர் சொன்ன கருத்து, அபிப்பிராயம் பிழையானதாக அடிபட்டுப் போகின்றது. ஒரு வேளை இவர் போராட்டம் என்ருல் ஆயுதம் ஏந்துவது மட்டும்தான் என எண்ணுகின்ருர் போலும். இவர்'இதுக்குப்பிறகும்......போய்விடு மெல்லே'(7ம் பக்கம்) என்று கூறுவது, பிரச்சனையை இந்த நேரத்திலைதான் தீர்க்கலாம். இவ்வளவு நாளும் இடைஞ்சல்கள் இருந்தன என்று பொருட்பட்டு விடுகின்றதல்லவா? அந்த நிலமையை அவர் எப்படிக் கணிக்கிருரோ? முன்னதிற்கும் பின்னதிற்குமான ஒற்றுமை வேற்றுமையை அவர் எப்படிக் கணிக்கிருர் என்பது தெளிவாக்கப்படாததால் அதைப்பற்றிய மதிப்பீட்டை இங்கே குறிப்பிடாமல் விட்டு விடுகின்றேன். இனி இக்காலத்திற்கு ஒவ்வாத வாழ்நிலைகளை கொண்டு வருவதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

10ம் பக்கம்- வீதியில் மீன்காரன் சத்தம் கேட்டு பலர் பைகளுடன் வீடுகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

-கடைகளுக்கு முன்னுல் நின்றவர்கள் தினசரிப்பேப்பர் தலையங்கங்களை விவாதமாக்கிக் கொண்டிருந்தனர்.( 5வருடங்களிற்கு முற்பட்ட, இயல்பான மக்களின் வாழ்நிலையில் எழுதுவது)

11ம் பக்கம்-'மகேச ஒரமாக நின்று வழிவிட்டுக் கொடுத்தான்....'இல் இருந்து '...இரண்டு பேர் கரசாரமாக இனம் தெரியாத நபர்களை விமர்சித்துக் கொண்டு போனுர்கள்..' வரைக்கும் - பகிரங்க விமர்சனம் என்பது இப்போது துட்டுக்குமில்லை. இதற்கு "மௌனத்தின் கொடூரம்" கவிதை பதில் சொல்லுகின்றதே.

-11ம் பக்கத்தின் இறுதியிலிருந்து முடிவுவரை உள்ள தன்மைகள் 84ம், 85ம் ஆண்டுக்கால நிகழ்வுத்தன்மைகளையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரிதும் ஒத்திருக்கின்றது. ஒரு வேளை இவ் எழுத்தாளர் ஐந்து வருடங்களுக்கு முன் வெளிநாடு வந்திருக்கலாம், அல்லது இக்கதை 3/4 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம்.

## நெஞ்சுபொறுக்குதில்லையே - ஊர்குளவி

ஊர்க்குளவி ஒரு காரணப்பெயராக இருந்தாலும், நெஞ்சு பொறுக்கமுடியாத விடயத்தை இவ்வளவு தெளிவாக சொல்ல முற்படும் தோழருக்கு இப்படியான பெயர் அவசியமில்லை என்றே நினைக்கின்றேன். அராஜகத்தை எதிர்ப்பதற்கே முகமூடி போட வேண்டிய துர்ப்பார்க்கிய நிலையை உணரத்தான் வேண்டும். எனினும் இங்கே ஓரளவாவது சுதந்திரமாக எழுதமுடிகின்றதுதானே.

இன்றைய நிலைமையை, நிலமைக்கான காரணங்களை விடயத்தின் தேவைக்குப் பொருத்தமான வகையில் அலசி ஆராய்ந்து(analyse பண்ணி) இனம் காட்டுகின்றார். இற்றைய நிலமைகளில் மிகவும் அவசியமான விஷயம். இந்தப் புத்தகத்திலேயே மிகவும் பிரயோசனமான பகுதி.

உண்மை பேசும் பத்திரிகைகள் மட்டத்தில் நான் ஒன்றை எப்போதும் எதிர்பார்க்கின்றேன். பெரும்பாலும் ஏமாந்து போகின்றேன் என்பது கசப்பான உண்மையும் கூட. இயக்கங்கள் எல்லாமே போட்டி போட்டுக் கொண்டு அராஜகம் செய்கின்றன.( அராஜகம் என்பது 4 வருடங்களிற்கு முன்பு கனதியான சொல், ஆனால் இன்றைய நிகழ்வுகளுக்கு அராஜகம் என்ற சொல் பலமிழந்து விட்டது. பாசிசம் என்பது பொருத்தமாக இருக்குமோ?) ஆகையால் அராஜகம் பற்றிப் பேசும் போது எந்தவொரு அமைப்பு வாதமும் சார்ந்து விமர்சித்தலாகாது. மக்களது இருப்பிலிருந்துமட்டும்தான் விமர்சிக்க வேண்டும். எந்தவொரு அமைபபையும், சபைகளைக்கூட, மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகவோ, மக்களின் சார்புத்தன்மையுடனோ பார்த்தல் என்பது, உண்மைக்குப்புறம்பானது. இதை ஊர்க்குளவி கவனத்தில் எடுதுதுக்கொண்டதாகத் தெரியவில்லை.

-'எமக்கு ஒரு வாய் இருக்க வேண்டிய அவசியமில்லை.துப்பாக்கிகளே அதன் வேலையைச் செய்யத் தொடங்கும்' என்ற வரி இக்காலத்திற்கு அவ்வளவு பொருத்தமானதல்ல. ஆசிரியரின்,இழப்பதற்கு இனி எதுவுமே இல்லையென்ற மக்களின் மனநிலையை, அதன் கொதிப்பைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், இவருக்கும் பாசிசவாதிகளுக்கும் வித்தியாசம் இல்லைப்போலும் என்பார்கள். அந்த வரியை எடுத்திருக்கலாம். அந்த வரி ஒருக்கால் அவசியம் எனக்கருதலாம், அஃதாவது ஆரோக்கியமான அமைப்பு வடிவம் சார்ந்து, அதுக்கு இப்போது இடமேயில்லையே.

-'அராஜகத்தை எதிர்ப்போம், பாசிசத்தை எதிர்ப்போம்' என பக்கத்திற்கு பக்கம் 'முற்போக்காக எழுதும்' எனக்குறிப்பிடுகின்றாரே. இப்படியான கோஷங்களை வைப்பவர்கள் முற்போக்கானவர்களாகவே இருக்க முடியாது. நாம் ஏன் 'முற்போக்கான'என்று முத்திரை குத்துவான். இறுதியில் 'அராஜகத்தை எதிர்ப்பதன் மூலம்தான் சுதந்திரத்திற்கான போராட்டத்தை முன்நகர்த்த முடியும்'என முடித்திருக்க வேண்டும்.

## அடாவடித்தனங்களும் கொலைகளும் - கங்கா

மிகவும் உண்மையான, நிலையைத் தெளிவாக இனம் காட்டும் ஒரு தரமான ஆக்கம். ஒவ்வொரு பத்திரிகையிலும், அக்கால நிகழ்வுகளை இதே தன்மையில் விளக்க முயல்வது சாலச் சிறந்தது. வாசிக்கும் எவருக்கும் விளங்கக் கூடிய காழ்ப்புணர்வு கொண்டவரும் உண்மையில் தானும் ஒன்றிக்கக் கூடிய விதத்தில், உண்மையை ஆரோக்கியமான பார்வையினூடாக இனம் காட்டுகின்றார்.

தோழர் கங்காவைக் கொண்டே ஒவ்வொரு பத்திரிகையிலும் நிலைமைகளை விளங்கப்படுத்துவது என்வரையில் விரும்பத்தக்கதே. எந்தவொரு விடயத்தையும் எழுதும் போது முழுமையான, மக்களின் நிலையிலிருந்து - இயக்கவியல்புவாதக் கண்ணோடு பார்த்து எழுதுவதற்கு தோழர் கங்காவின் இந்த ஆக்கம் ஒரு முன்னுதாரணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீங்காரம்

அரசு நிலமையைப்புரிந்து கொண்டு உரிமையைத்தரவே தராது. அது குழப்பத்தைத்தான் பேணும். உரிமை, அது நாமாக எடுத்துக் கொள்வது. எடுப்பதற்குத் தடையாக இருப்பதை உடைப்பது. போராடி அரசிடம் இருந்து வாங்குவதல்லவே. ஆசிரியர் தலையங்கம் முழுக்க முழுக்க ஒரு தேசிய முதலாளித்துவக் கட்சியின் நோக்கு நிலையில் இருந்து இன்றைய நிலைகளைப் பார்ப்பதாக உள்ளது. ஆகையால் அதை விமர்சிக்காமலே விட்டுவிடுகின்றேன்.
-வாசகர் கடிதங்களிற்குத் தேனீக்கள் பதில் கொடுப்பதில்லையோ?
-மாலைதீவு விடயம் -உள்ளர்த்தம் ஏற்புடையதாகவில்லை என்பதுடன் இப்படியான விடயங்களைப் பத்திரிகையில் கொண்டுவரும்போது விளம்பரம் - பிரசித்திதன்மையைப் பெற்று விடுகின்றது.

–கலைச்செல்வன், பிரான்ஸ்.

தங்களுடைய விமர்சனத்திற்கு நன்றி.
வாசகர் கடிதங்களுக்கு அவசியமேற்படும் பொழுது நாம் பதில் கொடுத்திருக்கின்றோம்.
ஆக்கதாரர்களுக்கான விமர்சனங்களுக்கு ஆக்கதாரர்களே பதில் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.'ரீங்கார'த்திற்கு தாங்கள் வைத்த விமர்சனத்திற்கு மட்டும் பதில் தருகின்றோம்.
தங்களுக்குள்ள சில "குழப்பங்களை"ப் புரிந்து கொண்ட எமக்கு இந்த விமர்சனம் ஆச்சரியத்தைத் தரவில்லை.
"..சிங்கள இனவாதிகளை பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உரியமுறையில் எதிர் கொண்டு எமது மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டினைத் தெளிவு படுத்தவேண்டியதோடு சிறிலங்கா ஆட்சியாளர்களினதும் இனவாதிகளினதும் தாக்குதல்களிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன் அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்..." (தேனீ_புரட்டாசி, பக்கம் 3). இவை இன்றைய மண்ணின் யாதார்த்ததுடன் எழுதப்பட்டவை, வெறும் சித்தாந்த வாய்ப்பாடல்ல! "எடுப்பது...உடைப்பது" என்பவை மட்டுமல்ல புரட்சிகரமான வார்த்தைகள்!!
மேலும் தங்கள் கடிதத்தில் "...ஒரு முழுமையான புரட்சிக்கான தயாரிப்பு வேலைகளில் ஒரு வீதம் கூட பூர்த்தியாகாத நிலையில் இங்கே ஆயுதப்போராட்டம் ...... நிகழ்ந்தது......." என்ற வரிகளை எடுத்துக் கொள்வோம். அரைநிலப்பிரபுத்துவத்திலிருந்து இன்னும் விடுபடாமலும் முழுமையான முதலாளித்துவத்திலிருந்து வெகு தூரத்திலும் இருக்கும் எமது மக்களின் சமூகஅமைப்பில் புரட்சிக்கான தயாரிப்புக்கள் இன்னும் முழுமை பெறவில்லை என்பதை உணரும் நீங்கள், அந்த மக்களை புரட்சிக்கான தயாரிப்பதற்கு அவசியமான 'இடைக்கால' நடவடிக்கைகள் பற்றித் தெளிவற்று இருக்கின்றீர்கள். மக்களின் அடிப்படைஉரிமைகளான பேச்சு சுதந்திரம், அமைப்பாகும் சுதந்திரம், பயமின்றி வாழும் சுதந்திரம், தமது இருப்பைப் பாதுகாக்கும் சுதந்திரம்....ஆகிய எவையையும் அனுபவிக்க முடியாத நிலையில், அவற்றை (அவை வெறும் தேசிய ஜனநாயகக் கோரிக்கைகளாக நீங்கள் கருதினாலும்) அடைய அவர்களைத் தயாரிப்பது புரட்சிக்கான தயாரிப்புகளேயாகும். இதுவே இன்றைய யதார்த்தில் அவசியமானதும் கூட.
மறுபுறத்தில், நடைபெற்ற ஆயுதப் போராட்டங்கள் "புரட்சிககான போராட்டங்கள்" என்ற குழப்பம் உங்களுக்கு இல்லை என்பது எமது நம்பிக்கை!!!

தேனீக்கள்.

தேனீயில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

(முன் அட்டைத் தொடர்ச்சி)

குடும்பங்களுக்கு 29.45 கோடி ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாகவும், ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 531 குடும்பங்களுக்கு 46.7 கோடி ரூபா உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடையாகவும் 17 ஆயிரத்து 785 குடும்பங்களுக்கு வீடமைப்பு நன்கொடையாக 4.62 கோடி ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1.10.89* அனைத்துக்கட்சிகள் மகாநாடு' ஜனதா விமுக்திப் பெரமுனவும், இதில் கலந்து கொள்ள வேண்டுமென வேண்டுகோள்விடுத்துள்ளது.

2.10.89* இலங்கை அரசு செலுத்த வேண்டிய கடன் ரூபா 221,917 மில்லியன். உள்ளூர்கடன் 98,780 மில்லியன் ரூபாவுக்கு மேலாகவுள்ளது. சர்வதேச நாணயசபைக்கும் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய கடன் 123,130 மில்லியன் ரூபா எனவும் இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.10.1989* இன்றைய தேசிய நெருக்கடிப் பிரச்சனைக்கு தேசிய அரசு பரிகாரமாகாது.மாறாக இடைக்கால அரசே நிறுவப்பட வேண்டும். இதனை நிறுவ ஜனாதிபதி முன்வராதபட்சத்தில் எத்தகைய பேச்சுவார்த்தைகளும் பயனளிக்கப் போவதில்லை" என ஐக்கிய சோசலிச முன்னணி தெரிவித்துள்ளது. இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளிலும் ஐக்கிய சோசலிச முன்னணி பங்குபற்றப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளது.

27.8.89 திகதியிடப்பட்ட ஐந்து எதிர்க்கட்சிகளின் அறிக்கையிலும் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது. சமாதானத்தினையும் வழமை நிலையினையும் மீளக்கொண்டு வருவதற்கும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கும் இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்பதும் அதிகாரமுடைய ஜனாதிபதி நீக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குப் பொறுப்பான பிரதம மந்திரி நியமிக்கப்பட வேண்டுமென்பதும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆலோசனைகளாகும்.

6.10.89* எல்.ரி.ரி.ஈ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவற்றிற்கிடையில் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா முயலுவதாக சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தாம் புலிகளுடன் பேசத்தயார் என முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அறிவித்தார்.

ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு தேர்தலில் நிற்பதற்குத் தாம் தயாராக உள்ளதாக விடுதலைப்புலிகள் தலைவர் பாலசிங்கம் கொழும்பில் கூறினர். இந்தியப்படை முற்றாக விலக்கப்பட வேண்டுமெனவும், வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட வேண்டுமெனவும் இரு நிபந்தனைகளையும் அவர் குறிப்பிட்டார்.

7.10.89* வடக்கு-கிழக்கு சமதான குழு திங்களன்று முதலாவதாகக் கூடும்.

வடக்கு-கிழக்கில் 14 நாட்களில் 44 யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர 7ம் திகதி பாராளுமன்றத்தில் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவுசெலவுத்திட்டத்தில், அரசின் மொத்த செலவினம் 103,043 மில்லியன் ரூபாய் எனவும் மொத்த வருமானம் 60,200 மில்லியன் எனவும் மதிப்பிடப பட்டுள்ளது. இதனால் துண்டு விழும் தொகை 42,843 மில்லியன் ரூபா ஆகும். இந்தத் துண்டு விழும் தொகையை அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்கள் மூலமாகவும் வேறு வளங்கள் மூலமாகவும் நிரப்பும் எனக் கூறப்படுகிறது.

8.10.89* வடக்கு-கிழக்கு மாகாண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதானக்குழுவின் கூட்டம், சில குழுக்கள் ஆலோசனை நடத்த அவகாசம் தேவை எனக்கேட்டுக் கொண்டதன் பேரில் ஒத்தி வைக்கப்பட்டதாக ஜனாதிபதி அறிவித்தார். ஈரோஸ் குழுவினர் தாம் சமாதானக்குழுவில் பங்குபற்றப் போவதில்லையென அதன் தலைவர் ஹமீத்துக்கு அறிவித்துள்ளனர். ஒத்தி வைக்கப்பட்ட சமாதானக்குழுக் கூட்டத்தை அரச உடனடியாகக் கூட்ட வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கில் தற்போது சேவையில் உள்ள தமிழ் முஸ்லிம் பொலிசாரில் 75 சதவீதமானோர்தொடர்ந்தும் தாங்கள் வடக்கு-கிழக்கில் சேவையாற்ற விரும்பும் அதே வேளை அங்குள்ள சிங்கள பொலிசாரில் 85 சதவீதமானோர் வெளி மாகாணங்கள் அல்லது தேசியப் பிரிவில் சேவை செய்ய விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் சேவையிலுள்ள சுமார் 26 ஆயிரம் பேரில் தமிழ் முஸ்லிம் பொலிசாரின் எண்ணிக்கை 3 சதவீதமாகவே உள்ளது. தமிழ் பேசும்பொலிசார், பொலிஸ் சேவையில் மிகவும் குறைவான எண்ணிக்கையில் காணப்படுவதால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சேவைக்கென தமிழ் பேசும் இனத்தவர்களை பொலிஸ் சேவைக்கு திரட்ட பல தடவை விளம்பரப்படுத்தப்பட்டது. ஆயினும் எதிர்பார்த்தளவு பலன் கிடைக்கவில்லை. பொலிஸ் தலமையகம் அறிவித்துள்ளது. அரசியல் அமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தின் கீழ் அமையவுள்ள வடக்கு கிழக்கு மாகாண பொலிஸ் பிரிவில் தமிழ் முஸ்லிம் மக்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது அவசியமென அரசியல் மற்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அ.அமிர்தலிங்கத்திற்குப் பதிலாக பாராளுமன்ற ஸ்தானத்திற்கு மாவை சேனாதிராஜா நியமிக்கப்பட்டார்.

11.10.89* 'பாராளுமன்றமோ அல்லது மாகாண சபையோ கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் தமது கட்சி சகல மாவட்டங்களிலும் போட்டியிடுமென'புளொட்'இயக்கத்தின் பிரதித் தலைவர் சித்தார்த்தன் மட்டக்களப்பில் ரெலோ காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.தேசிய இனப்பிரச்சனைக்குத் திட்டவட்டமான தீர்வொன்றைக் காணும் வரை வடக்கு-கிழக்கில் அமைதியை நிலை நாட்டமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். வடமாகாணப் பெறுப்பாளராக மாணிக்கதாசனும், கிழக்கு மாகாணப் பொறுப்பாளராக கோபாலனும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

12.10.89* இன்று கூடிய சர்வகட்சி மகாநாட்டில் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

ஜனநாயகமுறைக்கு வெளியே செயற்படுகின்ற சக்திகளை அதற்குள் கொண்டுவருதல், இளம்தலைமுறையினருக்கிடையில் நிலவும் ஆற்ருமைக்கு ஏதுவான காரணங்களைக் கண்டறிந்து நிவரணநடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமித்தல், கீழ் கண்ட விடயங்களான

* அதிகார பரவலாக்கல்,
* தேர்தல்முறைக்கான சீர்திருத்தம்,
* சர்வசனவாக்குரிமை,
* விகிதாசார பிரதிநிதிமுறையின் வெட்டுப்புள்ளி
* சிறுபான்மையினரது பிரதிநிதிததுவம்
* பொதுசன ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்குதல்
* அரசகருமமொழிக்கொள்கையின் பயனுறுதி வாய்ந்த அமுலாக்கம்
* கல்விக் கொள்கை
* அனைவருக்கும் சமத்துவமும் ஒப்புரவும் வழங்குதல்

www.tamilarangam.net

* தேசியக் காணிக் கொள்கை ஒன்றை வகுத்தல்

* ஜனநாயக செயல் முறையினை வலுப்படுத்தல்

* அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பளித்தலும் நாட்டின் எல்லாப்பிரதேசங்களிலும் உள்ளவர்களது பாதுகாப்பிற்கு உத்தரவாதமளித்தல்.

ஆகிய விடயங்களில் உடனடியான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன பற்றி அறிக்கையில் குறிப்பிட்டார்.

இந்த மகாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப். பங்குபற்றவில்லை.

14.10.89* தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் விடுவிக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவரான எஸ்.டி.பண்டாரநாயக்கா ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

15.10.89* நோர்வே, ஒஸ்லோ நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுவதற்குச் சென்ற யாழ்ப்பாண பாராளுமன்ற அங்கத்தவர் பிரேமச்சந்திரனும் மற்றும் நான்கு தமிழர்களும் விடுதலைப்புலிகளியக்கத்தைச் சேர்ந்தவர்களினால் தாக்கப்பட்டனர்.

16.10.89* சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச்சேர்ந்த நால்வர் குழு இலங்கைக்கு வந்தது.

17.10.89* அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படைகள் வெளியேற ஆரம்பித்தன.

19.10.89* ' இந்தியப்படை வெளியேறியதும் வட-கிழக்கு மாகாணத்தில் சட்டம், ஒழுங்கைப்பேணும் பொறுப்பு மாகாண முதலமைச்சரிடம் இருக்கும். போலிசாரின் உதவியுடன் அவர் இந்தப்பணியை மேற்கொள்வார்' என பாதுகாப்பு ராஜங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ண அறிவித்தார்.

28.10.89* இலங்கையில் இயங்கிவரும் இஸ்ரேலின் நலன்காக்கும் பிரிவினை மூடாவிட்டால் இங்கைக்கு அரபு நாடுகள் கொடுக்கும் நிதி உதவிகள் பாதிக்கப்படுமென சபாநாயகர் எம்.எச்.முகம்மது பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

29.10.89* வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இவ்வருடம் ஒக்டோபர் மாதம் வரை 18 சர்வதேச அமைப்புக்கும் புனர்வாழ்வுப் பணிகளுக்கும் 1 லட்சத்து 69 ஆயிரம் மில்லியன் ரூபாக்களை வழங்க முன்வந்துள்ளதாக மாகாண தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி 2124 மில்லியன் ரூபாவினையும், அவுஸ்திரேலியா 19 மில்லியன் ரூபாவினையும் , கனடா 512 மில்லியன் ரூபாவினையும் , டென்மார்க் 1557 மில்லியன் ரூபாவினையும், ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூகம் 500மில்லியன் ரூபாவினையும் , ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு 198மில்லியன் ரூபாவினையும்,சர்வதேச அபிவிருத்திச் சபை 3338மில்லியன் ரூபாவினையும், இந்தியா 800 மில்லியன் ரூபாவினையும்,இத்தாலி 800மில்லியன் ரூபாவினையும், ஜப்பான் 652 மில்லியன் ரூபாவினையும் ,நோர்வே 453மில்லியன் ரூபாவினையும், சுவீடன் 216 மில்லியன் ரூபாவினையும், சுவிட்சர்லாந்து 290 மில்லியன் ரூபாவினையும், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலயம் 452 மில்லியன் ரூபாவினையும், இங்கிலாந்து 792 மில்லியன் ரூபாவினையும், அமெரிக்கா 3000 மில்லியன் ரூபாவினையும்,உலக உணவுத்திட்ட நிறுவனம் 110 மில்லியன் ரூபாவினையும் வழங்க உறுதியளித்துள்ளன.

31.10.89* ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணியின் தலைவர் சித்தார்தன் தமிழ் இயக்கங்களின் ஒற்றுமை கருதி 'தமிழ் தேசிய சபை'யில் பங்களிப்புச் செய்த்தயார் என அறிவித்துள்ளார். ரெலோ, ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவை இணைந்து 'தம்ழ் தேசிய சபை'யை ஏற்படுத்தியுள்ளன.

செய்திகள் - நன்றி வீரகேசரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்த மொழிபெயர்ப்புகள்

உழைத்து, உழைத்து
உறுதியானவர்கள்
நீங்கள்
அதனால் தான்
உங்களை
முதுகெலும்பாக்கிக் கொண்டது
இந்த தேசம்

நீங்கள் விடும்
மூச்சுக்கள்
தேசத்திற்கு
மூலதனமாகும்



உங்களின் மேனியில்
உயிர் இல்லை
அதற்கு பதிலாய்
உழைப்பு தான்
உட்கார்ந்துக்
கொண்டிருக்கின்றது

நீங்கள் சிந்தும்
வியர்வைகள்
மட்டும் தான்
இங்கே ரத்தமாக
மொழிபெயர்க்கப் படுகின்றது

நீங்கள்
வாழ்வதற்காக உழைக்கவில்லை
உழைப்பதற்காகவே
வாழ்கின்றீர்கள்

நீங்கள் இன்றும்
தென்றலாய் தான்
திரிகின்றீர்கள்
சூறாவளியாய் மாறினால்
தேசம்
தாங்காது என்பதனால்

நீங்கள் ஒவ்வொருவரும்
சரித்திரங்கள்
உங்களை
விரித்துப் பார்க்க
விரைந்து வரலாம்
நாளை
இந்த தேசம்

-வெளிமடை ரபீக்